
# நற்கிரியைகளைக் கண்டு

**புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். (1 பேதுரு 2:12)**




ஆண்டவர் கொடுத்த பிரதான கட்டளை **"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்." (மத்தேயு 28:19,20)** என்பதாகும். எனவே ஒரு தேவனுடைய பிள்ளையின் பிரதான பணி, ஆண்டவரைப் பற்றிய நற்செய்தியை எவ்விதத்திலாவது பிறருக்கு அறிவிப்பது ஆகும். மேலும் **1 பேதுரு 2:9** கூறுகிறது **"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."** என்று. **1 கொரிந்தியர் 9:16** இல், பவுல் கூறுகிறார், **"சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது**

**என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ.“** என்று. எனவே சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டியது ஒவ்வொரு தேவப்பிள்ளையின் கடமையாகும். ஆனால் அப்படிப்பட்ட சுவிசேஷ வார்த்தை, அதைக் கேட்பவர்களின் இருதயத்தில் கிரியை செய்ய வேண்டுமானால், அதன் மூலம் அவர்கள் தேவனுக்குரியவர்களாய் மாற வேண்டுமானால், நாம் மற்றொன்றையும் சேர்த்து செய்ய வேண்டியுள்ளது. அதை பற்றியே மேற்க்கண்ட **1 பேதுரு 2:12** கூறுகிறது.

ஆம் நம்முடைய நற்கிரியைகளே நம்மில் உள்ள கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிறது. **2 கொரிந்தியர் 2:14-16** வசனங்கள் கூறுகிறது **“கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே மரணத்திற் கேதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம். இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?“**. ஆம் நம்முடைய வாயின் வார்த்தைகள் மட்டுமல்ல, நம்முடைய சுபாவம், கிரியைகள் ஆகியவையும் நம்மில் இருக்கும் கிறிஸ்துவின் நற்கந்தத்தை வெளிப்படுத்தும். அதுவே மற்றவர்கள் தேவனை மகிமைப்படுத்தி இரட்சிக்கப்படுவதற்கும், அல்லது கீழ்படியாமையினால் கெட்டுப்போய் நித்திய மரணமடைவதற்கும் காரணமாய் இருக்கிறது. இதனால் தான், பவுல் அகிரிப்பா ராஜாவிற்கு முன் நின்று, ஆண்டவரைப் பற்றி சாட்சி பகிர்ந்த பொழுது, **அப்போஸ்தலர் 26:28,29** இல் **“அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான். அதற்குப் பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.“**.

ஆம் பவுலின் சுபாவம், மற்றும் அவருடைய சாட்சி உள்ள வாழ்க்கை மற்றவர்கள் பின்பற்றக்கூடிய முன்மாதிரியாய் இருந்தபடியால், என்னைப்போலாகும்படி என அவரால் தைரியமாய் கூற முடிந்தது. கிறிஸ்துவின் வாசனை, பவுலினிடத்திலிருந்து வெளிப்பட்டபடியால் அகிரிப்பா ராஜா இவ்வாறாக கூறினார். ஆம் மற்றவர்கள் கிறிஸ்துவை

ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாவதற்கு, சத்திய சுவிசேஷத்தை அறிவிப்பது மாத்திரமல்ல, அதன்படி வாழ்ந்து நற்கிரியைகளான கிறிஸ்துவின் நற்கந்தத்தை நம்மில் இருந்து வெளிப்படுத்த வேண்டும்.

ஏனெனில் **பிலிப்பியர் 1:14-19** வசனங்களில் **"சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள். சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள். சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள். இதனாலென்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன். அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன். "**. இங்கு நாம் காண்கிறபடி, கிறிஸ்துவை பிரசங்கிப்போர் பலர் இருந்தனர். ஆனால் அவர்களில் சிலருடைய கிரியைகளோ, நற்கிரியைகளாயிராமல், துர்கிரியைகளாய் இருக்கின்றன. ஆம் **சுத்தமனதோடு கிறிஸ்துவை அறிவியாமல்** என்று பவுல் கூறுவதில் இருந்து, அவர்கள் உதட்டளவில் கிறிஸ்துவை பிரசங்கித்தனர். ஆனால் அவர்கள் பிரசங்கித்த வார்த்தைகள் அவர்களது மனதையே தொடவில்லை.

இன்று இப்படிப்பட்ட காரியங்களே காணப்படுகின்றன. ஒரு காலத்தில் கிறிஸ்துவை அறிவிப்பவர்கள் சிலராய் இருந்தனர். ஆனாலும் அவர்கள் ஊழியமும், அவர்களது வாழ்க்கையின் அர்பணிப்பும், அவர்கள் வெளிப்படுத்திய சுபாவ பண்புகளும், பலரை கிறிஸ்துவண்டை கூட்டி சேர்த்தது. எனவே உலகத்தில் எங்கெல்லாம் சுவிசேஷம் முதலாவது அறிவிக்கப்பட்டு, சபைகள் உருவான நேரத்தில், அந்த சபைகளின் ஆவிக்குரிய தரமும், அவற்றின் மூலம் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் நன்மைகளும் அதிகமாயிருந்தன. இன்று தேவனுக்கு மகிமையாக எழும்பி நிற்கும் ஆலயங்களும், பள்ளி கல்லூரி, மருத்துவமனைகளும் அதற்கு சாட்சி. இதனால்தான் பேதுரு, **1 பேதுரு 5:1-4** வசனங்களில் **"உங்களிலுள்ள மூப்பருக்கு உடன்மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து,**

**கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.“** என்று கூறுகிறார்.

ஆம் மேற்கூறப்பட்டபடி அவலட்சணமான ஆதாயத்திற்காக ஊழியம் செய்யக்கூடாது. இப்படிப்பட்டவர்கள் தேவ பக்தியை ஆதாயத் தொழிலாக மாற்றி, மந்தை மேய்ப்பதற்கு பதிலாக மந்தையை மேய்ந்து போடுகிறவர்களாய் இருக்கின்றனர். இன்று ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறோம் என்று பலர் எழும்புகின்றனர். குறிப்பாக வாலிபர்கள் பலர், எங்கள் திறமையை, தாலந்தை ஆண்டவருக்காக பயன்படுத்த போகிறோம் என்று கூறி, சபை ஊழியம், சுவிசேஷ ஊழியம், பாடல் ஊழியம் என பலவிதங்களில் ஊழியம் செய்கின்றனர். ஆனால், அவற்றால் சமுதாயத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. காரணம், அவர்களின் ஊழியத்தின் மூலம் ஆண்டவர் மகிமைப்படுவதற்கு பதிலாக, அவர்கள் தங்கள் சுய மகிமையை தேடுகின்றனர். இன்னும் சிலர், ஊழியத்தை ஆதாயத் தொழிலாக மாற்றி விட்டனர். இவற்றையெல்லாம் விட சிலர், ஊழியம் என்ற போர்வையில் உலகத்தை சபைக்குள்ளாக கொண்டு வந்து விட்டனர். இதனால் இன்று சபையில் ஆராதனையில் கலந்து கொள்வதற்கும், உலகப் பிரகாரமான இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விட்டது.

**அப்போஸ்தலர் 19:11-17** வசனங்களில் **“பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன. அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து: பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள். பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழுபேர் இப்படிச் செய்தார்கள். பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி, பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள,**

**அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள். இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபோது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது.**".

இங்கு மேற்கண்ட வசனங்களில் பவுலினிடத்திலிருந்து வெளிப்பட்ட தேவ வல்லமையை, சரியாக புரிந்து கொள்ளாமல் அதை ஒரு மந்திர வித்தை போல் நினைத்து, அதைப்போல் செய்யு முற்பட்ட அந்த ஏழு வாலிபர்களின் நிலையை நாம் காணலாம். இன்று உள்ள வாலிபர்களும், ஊழியத்தின் மேன்மையை, தேவ வார்த்தையின் வல்லமையை, உணராமல் அதற்கு கீழ்படியாமல், ஏதோ ஒரு ஷோ (Show) செய்வது போல் நினைத்து, ஆண்டவருடைய ஊழியத்தை செய்வது வேதனைக்குறியது. அதனால் தேவ வல்லமை வெளிப்படாமல், பிசாசின் வல்லமையே வெளிப்படுகிறது. ஊழிய அழைப்பும், அர்ப்பணிப்பும் இல்லாமல் YouTube போன்ற சோசியல் மீடியாக்களில் பிரபலமடைவதற்கும், அதன் மூலம் வருமானம் சம்பாதிப்பதற்கும், இன்று ஊழியம் செய்யப்படுகிறது. இது மிகவும் வேதனைக்குரிய காரியமாகும்.

இன்று சத்துருவாகிய பிசாசானவன், அநேக இளைஞர்களை இப்படிப்பட்ட பாதையில் அழைத்துச் சென்று, அவர்களை வஞ்சிக்கிறான். இதனால் தேவ நாம மகிமைப்படுவதற்கு பதிலாக தூஷிக்கப்பட இவர்கள் காரணமாக இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில், **"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்." (யோவான் 12:26)** என்று ஆண்டவரே கூறியுள்ளார். ஆண்டவருக்கு உண்மையாய் ஊழியம் செய்தோர், பலவித துன்பங்களின் வழியாய் கடந்து போயிருந்தாலும், கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ணி, தங்களை அர்பணித்ததால், பிதாவாகிய தேவனால் அவர்கள் கனப்படுத்தப்பட்டு, இன்றளவும் அவர்களுடைய பெயர் சபை சரித்திரத்தில் காணப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக பரமராஜ்யத்தை அவர்களும், அவர்களின் ஊழியத்தின் மூலமாக ஆண்டவரை அறிந்தவர்களும், சேர்ந்துள்ளனர். எனவே 1 பேதுரு 2:12 இல், நாம் கண்டபடி தேவ நாமம் மகிமைப்படும்படியாக, நல்நடக்கை உடையவர்களாக நாம் இருப்பது, நாம் செய்யும் ஊழியத்திற்கு உண்மையான பலனை தரும். ஆண்டவர் தாமே அப்படிப்பட்ட ஊழியத்தை செய்யும்படியாய், நம் ஒவ்வொருவருக்கும் கிருபை பாராட்டுவராக. ஆமென், அல்லேலூயா.